**பெயர்– விஜயகுமாரி**

**கணவர் பெயர்– பிரபாகரன்**

**நாள்– 18.03.2024**

**OS NO. 253/2019**

**வா.சா.1 குறுக்கு விசாரணை :**

நான் வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். நான் காஞ்சிபுரத்தில் கருக்கினில் அமர்ந்தவள் கோவில் தெருவில் வசித்து வருகிறேன். எங்களுடைய இடத்தில் பிரதிவாதி குழி தோண்டி கடைக்கால் போட முற்பட்டதால் வழக்கு தாக்கல் செய்திருக்கிறோம். தாவா சொத்து விவரத்தில் கண்டுள்ள B ஷெடியூல் சொத்திற்கான நான்கு எல்லைகள் விவரம் எனக்கு தெரியாது. கடந்த 14.10.1999 தேதியிட்ட காஞ்சிபுரம் மாநகராட்சியினால் என் மாமனார் பெயருக்கு அளிக்ககப்பட்ட அங்கீகரிக்கப்படட வரைபடத்தை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். அதன் அசல் ஆவணத்தை நான் ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வீடு மாறும் போது அந்த ஆவணம் தொலைந்து விட்டது நகல் மட்டும் தான் என்னிடம் உள்ளது. அவ்வாறு அசல் ஆவணம் நான் காஞ்சிபுரம் நகராட்சியிலிருந்து பெற்றிருந்தால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் அவ்வாறு பெறவில்லை என்பதால் தான் நீதிமன்றத்தில் அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தற்போது என் கணவர் எந்த வேலையும் செய்யவில்லை. இதற்கு முன்பு என் கணவர் என்ன வேலை செய்து வந்தார் என்றால் அவர் ஜவுளி கடை வைத்திருந்தார் மற்றும் ஸ்டேஷனரி கடை வைத்திருந்தோம்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளிற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/–(R.ராஜேஸ்வரி,B.Com.,L.L.M.,)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காஞ்சிபுரம்.